1972 ஆகஸ்ட் 22]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*Traffic Regulation Work by the Students*

* 209. Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the expansion of the scheme for the use of students for traffic regulation work in Madras City ?

**போக்குவரத்தை முறைப்படுத்தும் பணியில் மாணவர்கள்**

**திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்):** மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகரில் போக்குவரத்தை முறைப்படுத்தும் பணியில் மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கான திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்த விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** சென்னை மாநகரில் வண்டிப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் பணிக்கு மாணவர்களை முறையாகப் பயன்படுத்தும் திட்டம் எதும் இல்லை.

*Subramaniar Temple at Tiruchendur*

* 210. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to answer the following question in connection with the answer for the L.C.Q. No. 75 on 31st January 1972—the present stage of the construction of break waters for protecting the Subramaniar Temple at Tiruchendur from sea erosion ?

**திருச்செந்தூர் சுப்பிரமணியர் கோவில்**

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் 31—1—1972-ஆம் நாள் சட்ட மன்ற மேலவையில் வினா எண். 75-க்கு அளித்த விடையினையொட்டி கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

திருச்செந்தூர் சுப்பிரமணியர் கோயிலைக் கடல் அலைகள் அரிக்காமல் தடுக்கத் தடுப்புச் சுவர் கட்டும் வேலை எந்த நிலையில் இருக்கிறது ?